# பாலைவனம்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# பாலைவனம்

## உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# பாலைவனம்

புவியியலின்படி ஆண்டுக்கு 250 மில்லி மீட்டருக்குக் குறைவான மழைப்பொழிவைப் பெறும் நிலப்பகுதி பாலைவனம் ஆகும். மேலும் பூமியின் வறண்ட நிலப்பகுதியையும் நாம் பாலைவனம் என்போம். பூமியின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியைப் பாலைவனங்கள் கொண்டுள்ளன.


## பாலைவனம்



# வறண்டநிலப்பகுதி



## மூன்றில் ஒரு பகுதி பாலைவனங்கள்



பொதுவாக பாலைவனங்கள் இரவில் அதிகக் குளிருடனும் பகலில் அதிக வெப்பத்துடனும் இருக்கும். பாலைவனங்களின் நிலப்பகுதிகளில் மணல் மட்டும் இருப்பதில்லை.



கற்கள், பெரிய பாறைகள் மற்றும் சரளைக் கற்களும் காணப்படும். குளிர் பாலைவனங்கள் பனியைக் கொண்டிருக்கும்.



பெரிய பாறைகள்





சரளைக் கற்கள்



குளிர் பாலைவனம்

பாலைவனங்களில் மனிதர்கள் வாழ்வது மிக மிகக் கடினம். சில தாவரங்கள், விலங்குகள், ஊர்வன உயிரினங்கள் போன்றவை பாலைவனங்களில் காணப்படுகின்றன. இங்கு வாழும் பெரும்பாலான தாவரங்கள் நீர் இழப்பைத் தடுப்பதற்காக முட்களைக் கொண்டுள்ளன. விலங்குகளின் உடல் அமைப்பும், வாழ்க்கை முறையும் பாலைவனச் சூழலுக்கு ஏற்ப அமைந்துள்ளன.

## பாலைவனத் தாவரங்கள்
## (முட் தாவரங்கள்)


## ஊர்வன உயிரினங்கள்





# பாலைவன விலங்குகளின் உடலமைப்பு

## பாலைவனத்தில் வாழும் ஒட்டகங்கள்






தடிமனான உதடு




அடர்த்தியான முடிகள்

# நீண்ட கால்கள், தடிமனான மூக்கு மற்றும் அடர்த்தியான தோல்



பாலைவனங்கள் அமெரிக்காவின் மேற்குப் பகுதி, மேற்கு ஆசியா, மத்திய ஆஸ்திரேலியா, தெற்கு மற்றும் வட ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.

# பாலைவனம் வரைபடம்



பாலைவனங்களை அவற்றின் தன்மை அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கலாம். அவை,

**1. வெப்பம் மற்றும் வறண்ட பாலைவனங்கள் (Hot and dry deserts):** வெப்பநிலை ஆண்டு முழுவதும் சூடாகவும் வறண்டதாகவும் இருக்கும்.

சான்று: சஹாராப் பாலைவனம் (Sahara Desert), மொஜாவே பாலைவனம் (Mojave Desert)

**சஹாராப் பாலைவனம்**





**மொஜாவே பாலைவனம்**

2. **கடலோரப் பாலைவனங்கள்** (Coastal Deserts): கடலோரப் பாலைவனங்கள் சற்று அதிக ஈரப்பதம் கொண்டவை.

சான்று: சிலியின் அடகாமா பாலைவனம் (Atacama Desert).




**சிலியின் அடகாமா**

3. **குளிர் பாலைவனங்கள்** (Cold deserts): குளிர் பாலைவனங்கள் மற்ற வகைப் பாலைவனங்களுடன் ஒப்பிடுகையில் மிக மிகக் குறைந்த வெப்பநிலையைக் கொண்டுள்ளன. பனிப்பாறைகள் நிறைந்து இருக்கும்.

சான்று: அண்டார்டிகா (Antarctica).

# அண்டார்டிகா



## சில குறிப்பிட்ட பாலைவனங்கள் :

### 1. அண்டார்டிகா பாலைவனம்

உலகில் உள்ள பாலைவனங்களுல் பரப்பளவில் மிகப்பெரியது அண்டார்டிகா பாலைவனம் ஆகும்.



## 2. சஹாராப் பாலைவனம்

சஹாரா என்ற அரபுச்சொல்லுக்கு பாலைவனம் என்று பொருள். வட ஆப்பிரிக்காவின் பெரும் பகுதியை உள்ளடக்கியது. கோடைகாலத்தில் சராசரி வெப்பநிலை 100.4°F(38 °C) - 114.8°F (46 °C) வரை இருக்கும்.



## 3. கோபி பாலைவனம்

சீனா மற்றும் மங்கோலியாவின் எல்லையில் அமைந்துள்ளது. கோபி பாலைவனம் மழை நிழல் பாலைவனம் (rain shadow desert) என்று அழைக்கப்படுகிறது.




## 4. தார் பாலைவனம்

இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடு வரை பரவியுள்ளது. கிரேட் இந்தியன் டெசர்ட் (Great Indian Desert) என்று அழைக்கப்படுகிறது. தார் பாலைவனம் வெப்பப் பாலைவனமாகும்.



# தார் பாலைவனம் வரைபடம்



# பாலைவனம்







உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com